# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (04.08.2025) நிகழ்வுகள்!



**1. ஓலைச் சுவடிகளை பாதுகாக்க தமிழ்நாட்டுக்கு கடந்த 20 ஆண்டுகளில் 1 கோடியே 64 லட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு ஏன்?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



தமிழ்நாட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட பழமையான கையெழுத்து பிரதிகளான ஓலைச் சுவடிகளின் பாதுகாப்பு பற்றி திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் ஆகஸ்டு 4 ஆம் தேதி சில கேள்விகளை எழுப்பினார்.

“தமிழ்நாட்டிலிருந்து கிடைத்துள்ள பழமையான கையெழுத்துப் பிரதிகளான ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்துதல், டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? அல்லது மேற்கொள்ள முன்மொழிந்திருக்கிறதா? அப்படி யானால், அதன் விவரங்கள் என்ன?

ஏற்கனவே இருந்த தேசிய ஓலைச் சுவடிகள் இயக்கம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஞானபாரதம் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இருந்து எத்தனை கையெழுத்து ஓலைச் சுவடிகள் கையகப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன?

இன்னமும் பல தனிநபர்களிடம் முக்கியமான ஓலைச் சுவடிகள் இருக்கும் நிலையில் அவற்றை கையகப்படுத்த கொள்கை மற்றும் சட்ட தெளிவு இல்லாததால் இன்னமும் அவை தனி நபர்களிடமே இருக்கின்றன. அவர்களின் தயக்கத்தைப் போக்கி அந்த ஓலைச் சுவடிகளை சேகரிக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா?

தேசிய ஓலைச்சுவடி இயக்கத்தின் கீழ் குறிப்பாக தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

இந்த இயக்கத்தின் பிராந்திய மையங்கள் அல்லது டிஜிட்டல் மயமாக்கல் மையங்கள் தமிழ்நாட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?” ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியுள்ளார்.

**2. NIT, IIT மற்றும் மருத்துவ நிறுவனங்களில் காலி பணியிடங்களை நிரப்ப கால தாமதம் ஏன்?**

**ஆ. ராசா கேள்வி**



தேசிய தொழில்நுட்பக் கழகம் (NITகள்) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IITகள்), சிறப்பு பல்நோக்கு மருத்துவ நிறுவனங்களில் காலியாக உள்ள மொத்த பணியிடங்கள் எத்தனை என்றும் அவை நிரப்பப்படாதது ஏன் என்றும் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டு பிரிவுகள் உட்பட அதிக எண்ணிக்கையிலான பணியிடங்கள் காலியாக உள்ளது எனும் செய்தி குறித்த உண்மைத்தன்மை என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் காலியாக உள்ள பதவிகளை நிரப்ப அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? ஒதுக்கப்பட்ட பிரிவு இடங்களை நிரப்ப எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கை என்ன?

**3. தொடரும் நீட் தேர்வு முறைகேடுகள் அநீதியை தடுக்காத ஒன்றிய அரசு**

**கலாநிதி வீராசாமி கண்டனம்**



நீட் நுழைவுத் தேர்வுக்கு மாநிலங்களில் இருக்கும் தீவிர எதிர்ப்பு குறித்தும் நீட் தேர்வுகளில் தொடர்ந்து முறைகேடுகள் நடந்து வருவது குறித்தும் திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

வினாத்தாள் கசிவுகள் குறித்த குற்றச்சாட்டுகளைத் தீர்க்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

மருத்துவ நுழைவுத் தேர்வுகளை நடத்துவதில் மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்குவதில் அரசுக்கு இருக்கும் தடை என்ன? இன்னும் அதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காத தன் காரணங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4. சுற்றுலாத் துறையை வளர்க்க நடவடிக்கை என்ன ?**

**டி.ஆர்.பாலு கேள்வி**



தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, ஜம்மு-காஷ்மீர், சிக்கிம், உத்தரகண்ட் மற்றும் உத்தரபிரதேசம் உட்பட மாநில/யூனியன் பிரதேசங்கள் வாரியாக நாடு முழுவதும் சுற்றுலாத் திறனை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு அரசு வழங்கும் நிதி உதவி உட்பட ஆதரவுகள் என்ன? COVID-19 தொற்றுநோய்க்குப் பிறகு சுற்றுலாவை மீட்டெடுப்பதில் அரசு மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளின் விவரங்கள்? என்ன?

**5. தமிழ்நாட்டில் PMMY திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்**

**தர்மபுரி - ஆ.மணி கேள்வி!**



தமிழ்நாட்டில் குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் வேலையில்லாத இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு பிரதம மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் உரிய நேரத்தில் கடன் வழங்குவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என தர்மபுரி மக்களவை உறுப்பினர் ஆ. மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பயனாளிகள் PMMY கடன்களை நிலையான சுயதொழிலுக்கு திறம்பட பயன்படுத்த உதவும் வகையில் திறன் மேம்பாடு, நிதி கல்வியறிவு உள்ளிட்ட உதவிகளை வழங்க அரசின் திட்டங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக தர்மபுரி தொகுதியில் அதிக எண்ணிக்கையிலான முத்ரா கடன்களைப் பெற்ற துறைகள் மற்றும் நிறுவனங்களின் விவரங்கள் என்ன?

தர்மபுரி மற்றும் தமிழ்நாட்டின் பிற கிராமப்புறங்களில் உள்ள பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பெண் தொழில்முனைவோர் போன்ற விளிம்புநிலை சமூகங்களுக்கு PMMY கடன்களுக்கான சமமான அணுகுமுறையை உருவாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. தாராபுரம் மற்றும் வேலூரில் புதிய வங்கி கிளைகளை திறப்பது எப்போது?**

**கே.இ.பிரகாஷ் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!**





தமிழ்நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில், குறிப்பாக வேலூரில் உள்ள அணைக்கட்டு, கே.வி.குப்பம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் குடியாத்தம் தொகுதிகளில் பொதுத் துறை வங்கிக் கிளைகள் மற்றும் ஏடிஎம்கள் எங்கு உள்ளன என வழிகாட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என திமுக மக்களவை உறுப்பினர்கள் பிரகாஷ் மற்றும் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான தூரம் அல்லது மக்கள் தொகை வரம்புகள் குறித்து அரசாங்கத்திடம் உள்ள பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள் என்ன?

தமிழ்நாட்டின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் திறக்கப்பட்ட புதிய பொதுத் துறை வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் இந்த விதிமுறைகளின் கீழ் திறக்கப்பட்ட வங்கிக் கிளைகளின் பெயர்கள் என்ன?

மகாராஷ்டிராவின் தாராஷிவ் மாவட்டத்தின் 60 கிராமங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க மகாராஷ்டிராவிலிருந்து அரசாங்கத்தால் பெறப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை என்ன?

ஜன் தன், DBT மற்றும் PMJJBY திட்டங்களிலிருந்து பொது மக்களை விலக்குவதற்கு வங்கி உள்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளே காரணம் என்பதை ஒன்றிய அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா? அப்படியானால், இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த சரியான நடவடிக்கைகள் என்ன?

டிஜிட்டல் சேவைகளை அணுக முடியாதவர்களுக்கு இந்தப் பகுதிகளில் இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கிகள் அல்லது மொபைல் பேங்கிங் வேன்களை நிறுத்த அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள், முன்மொழியப்பட்ட காலக்கெடு மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடு ஆகியவை குறித்த விவரங்கள் என்ன? என்று பல்வேறு கேள்விகளை அவர்கள் கேட்டுள்ளனர்.

**7. கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?**

**டி.மலையரசன் கேள்வி!**



கேலோ இந்தியா திட்டம் தொடங்கியதிலிருந்து தற்போதுவரை ஊக்குவித்த மொத்த விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்பு திட்டங்களின் எண்ணிக்கை குறித்து மக்களவையில் திமுக கள்ளக்குறிச்சி எம்.பி. டி மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

தென் மாநிலங்களில், நிதி மற்றும் வசதிகளை சமமான அளிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் ஒதுக்கீட்டு அளவுகோல்கள் என்ன?

அத்தகைய மையங்களில் திறன் கண்டறியப்படும் நிகழ்ச்சிகள் என்ன? மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மேற்கூறிய திட்டத்தின் கீழ் உள்ள பிற தேசிய நிகழ்வுகளில் பங்கேற்ற விளையாட்டுவீரர்களின் எண்ணிக்கை என்ன?

கேலோ இந்தியாவின் கீழ் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ள உள்கட்டமைப்பு மேம்பாடு அல்லது தடகள ஊக்குவிப்பிற்கான தமிழ்நாடு அரசின் திட்டங்கள் என்ன மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

அடிமட்ட விளையாட்டுகளை வலுப்படுத்தவும், பாரம்பரிய மற்றும் உள்நாட்டு விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், திட்டத்தின் கீழ் நிதியளிப்பதிலும் பாலினம் மற்றும் பிராந்திய சமநிலையை உறுதி செய்யவும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

**8. பள்ளிகளில் 100% குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் நடவடிக்கை என்ன?**

**கே. ஈஸ்வரசாமி கேள்வி!**



தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை வழங்க ஒன்றிய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாவட்ட வாரியாக கட்டப்பட்ட கழிப்பறைகளின் எண்ணிக்கை என்ன? என்று கேட்டும் பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

**9. முறையான கடன் வழங்குதல் மற்றும் நியாயமான விலைக்கு தேசிய அளவிலான விதிமுறைகள் என்ன?**

**தயாநிதி மாறன் கேள்வி!**



கடன் மற்றும் வைப்புத்தொகை வளர்ச்சிக்கு இடையேயான தொடர்ச்சியான வேறுபாட்டின் உறுதியான நீண்ட கால நிதி அமைப்பை உறுதி செய்வதற்காக வீட்டு சேமிப்புகளை வங்கி வைப்புகளாக மாற்ற அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன?


கடன் கிடைக்கும் தன்மையை சிதைக்காமல் பணப்புழக்கத்தை சமநிலைப்படுத்த ஒழுங்குமுறை மாற்றங்கள் பரிசீலிக்கப்படுகிறதா?

ரிசர்வ் வங்கியின் பணப்புழக்க பாதுகாப்பு விகிதம் (LCR) விதிமுறைகளை மறுசீரமைக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, முறையான பணப்புழக்க மாற்றங்களை தடுக்க குறித்த நடவடிக்கை என்ன?

பாதுகாப்பற்ற சில்லறை கடன் மற்றும் சிறுநிதி பிரிவுகளில் வளர்ந்து வரும் அழுத்தத்தைக் கருத்தில் கொண்டு சிறிய கடன்களில் பொறுப்பான கடன் மற்றும் நியாயமான விலை நிர்ணயம் செய்வதற்கான தேசிய அளவிலான கட்டமைப்பை அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா?

தனியார் கடன் சந்தைகள் பாரம்பரிய ஒழுங்குமுறை வலையமைப்பிற்கு வெளியே வேகமாக வளர்ந்து வருவதால், முறையாக ஒன்றோடொன்று இணைந்திருத்தல் மற்றும் சாத்தியமான தொற்று அபாயங்களைக் கண்காணிக்க வெளிப்படுத்தல் அடிப்படையிலான மேற்பார்வை பொறிமுறையின் தேவையை அரசாங்கம் முன்கூட்டியே எதிர்பார்க்கிறதா?

# அணையாவிளக்கில் ஒளிரும், அற்புத விளக்கு தலைவர் கலைஞர்!



நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் ஆறாத வடுக்களுடன் தவிக்கவிட்டு, மீளாத் துயில் கொண்டு இன்றோடு ஆண்டுகள் ஏழு ஆகிறது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்குக் பிறகு மாளாத்துயரை மடியில் சுமந்ததுபோல் நாளும் அவர் நினைவுடன் உரம் மிக்க உடன்பிறப்புக்களை ஓ.... வெனக் கதறவிட்டு, தனது அண்ணனின் அரவணைப்பில் அமைதிகாணச் சென்று ஆண்டுகள் ஆனது ஏழு.

எத்தனையோ அரசியல் மாற்றங்கள், சமூக ஏற்றங்கள் தமிழ்நாட்டில். இந்த ஏழு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஆறாவது முறையாக நமது கழகத்தின் ஆட்சி!

முதல் முறையாக நமது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர்!

மத்தியில் மமதைமிகுந்த பாசிச பாஜக! தமிழகத்தில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள்!



**வெ.அன்புவாணன்**

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

சாலைப்பணிகள்! பாலப்பணிகள்! வேலைவாய்ப்புகள்! நாளுக்கொரு நலத் திட்டங்கள்! என வெற்றி நடைபோடும் திராவிட மாடல் அரசு! இத்தனையும் காண தலைவர் கலைஞரில்லை!

ஆனால் அவரின்றி, அவர் நினைவின்றி எதையும் தலைவர் தளபதியவர்கள் நிகழ்த்துவது மில்லை!

அண்ணா எனும் அணையாவிளக்கின் ஒளி மங்காமல் எப்படி தலைவர் கலைஞர் காத்துவந்தாரோ, அதுபோல கலைஞர் எனும் கலங்கரை விளக்கின் கம்பீரம் குறையாமல், ஏற்றிப் போற்றி வருகிறார் நமது இனம் தழைக்க கொடையாய் வாய்த்திட்ட திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்.

சாமானிய எளிய குடும்பத்தில் பிறந்து, சரித்திரத்தின் பொன்னேடுகளில் இடம் பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள் தான் ஏற்றுக் கொண்ட, கொள்கைகளுக்காக பட்ட ரணங்கள், அவர் சந்தித்த கெட்ட நிகழ்வுகள், எண்ணிலடங்கா சோதனைகள், இதயத்தைப் பிழிந்த வேதனைகள் எத்தனை? எத்தனை?

அரசியலில் அடியெடுத்து வைத்தபோதே, “இந்தா விபீஷணா உனக்கு லங்காபுரி பட்டணம் என்றா அவருக்கு மகுடம் சூட்டப்பட்டது?

இருபது வயதிலேயே தந்தை பெரியாரின் இனமான, சுயமரியாதைப் பகுத்தறிவு கர்ஜனையைக் கேட்டும், அண்ணாவின் திராவிட நாடு இதழில் வெளிவந்த “இளமைபலி” சிறுகதை மூலம் அறிமுகமான, அன்னைக்கு நிகராய் அன்பூட்டி, அரவணைத்து, அரசியல் சுவடுகளை அறிமுகம் தந்த அண்ணா தேர்தல் அரசியல் இல்லையென 1949 ல் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இயக்கம் கண்டபோதும், தனது 25 வயதில் அவரோடு இணைந்து பணியாற்றி, கலைத்துறையில் வெற்றிப் படிக்கட்டுகளில் விரைந்து முன்னேறிய காலந்தொட்டு, தலைவர் கலைஞரின் வளர்ச்சிக்கு உரமாய் நின்றவர்கள் ஒருசிலரே!

ஏ அப்பா...

இப்படி பேசுகிறாரே! பேச்சு வாள்வீச்சு போலல்லவா இருக்கிறது! எழுத்தில் என்னவொரு சூடு! சுற்றிவளைத்து சுயமரியாதைக் கருத்துக்களை சூரணமாய் தருகிறார்.

பகுத்தறிவுக் கருத்துக்களை பாலிடை கலந்த மெழுகு போல் பாசாங்கு இல்லாத பைந்தமிழில் அரங்கேற்றுகிறாரே!

யார் இவருக்கு பதில் சொல்வது? என்று எதிரிகள் மலைத்து நிற்கும் சூழலை உருவாக்கியவர்.

அவரது ஆரம்ப அரசியல் மற்றும் கலைத்துறை பிரவேசமே எதிரிகளுக்கு அக்கினிக் கணையாய் அவர்கள் இதயத்தை துளைத்தது.

சிலரை வளைத்தது.

அந்த சிலர் திரை மற்றும் அரசியலில் எம்.ஜி. ராம்சந்தர் எனும் எம்.ஜி.ஆர். விழுப்புரம் சின்னச்சாமி கணேசன், முத்தையா எனும் கண்ணதாசன்.

இன்னும் கூட சொல்லலாம். இங்கு இடமில்லாமல் போகும்.

நாட்டையே கட்டியாளும் தேசியக்கட்சியை எதிர்க்கிறோம் சதிகார ஆரியத்தின் வேரறுத்து, தோலுரித்துக் காட்டுகிறோம்.

காமராசரையே கொல்லத்துணிந்த வடவரின் வஞ்சகத்தை அம்பலப்படுத்தி, அசிங்கப்படுத்துகிறோம். என்னாகுமோ?

புதுச்சேரியில் ஏற்கெனவே கொலைவெறி தாக்குதல். குடும்பம் இருக்கிறது. மனைவி மக்கள், உடன் பிறந்தோர் நலன் தன் ஒருவனைச் சார்ந்ததே என்ற அச்சமெல்லாம் அவருக்கு இருந்ததில்லை.

இருந்திருந்தால், அண்ணாவின் ஆணையேற்று, டால்மியாபுரம் எனும் இந்திப் பெயரை அழிக்கப்போனவர் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்திருப்பாரா?

ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்று அரியலூர் சிறையில் அவதி தான் அடைந்திருப்பாரா?

அண்ணாவின் மறைவிற்குப் பிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சராக, கழகத்தின் தலைவராக பொறுப்பேற்ற தனது 45 வது வயதிலேயே மத்திய அரசியல் அரங்கில் தவிர்க்க முடியாத, சொல்லப்போனால், பிரதமர், குடியரசுத் தலைவர் எனும் இந்தியாவின் பெரும் தலைமைப் பதவிகளை தீர்மானிக்கும் சக்தியாக தனது அறிவுத்திறத்தால், அரசியல் நுட்பம் அறிந்த ராஜதந்திரங்களால் உயர்ந்து நின்றவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்த பெருமை, புகழுக்கெல்லாம் காரணம் தனது தலைவர் அண்ணா அவர்களே என்று தனது இறுதி நாட்கள் வரை புகழ்ந்துரைத்தார் தலைவர் கலைஞர் அவர்கள்.

தன்னை வளர்த்தெடுத்த தலைவனை தனது இறுதி மூச்சு வரை, ஐம்பதாண்டுகள் தூக்கிப் பிடித்த பெருந்தொண்டரை உலக அரங்கில் வேறெங்கும் காண முடியாது.

கலைஞர் அவர்களுக்கு இரண்டு நா இருக்கிறது.

ஒன்று பேனா! மற்றொன்று செந்நா! எனப் புகழுரைக்கப்பட்ட போது, பதிலுரையில், என்னிடம் மூன்றாவதாக ஒரு நா இருக்கிறது அது, “அண்ணா!”

சொல்லப்போனால் அதுதான் எனது முதல் நா என்று அண்ணாவை அனுப்பொழுதும் மறவாமல் சுவாசித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பழைய பாசமலர் திரைப்படத்தில் கவியரசு கண்ணதாசனின் பாடல் ஒன்றில்,

தங்கை உயிரெண்ணி தன்னுயிரை வைத்திருந்தான்!

அண்ணன் வளர்த்த உயிர் அவனுடனே சென்றதம்மா!

என்ற உணர்ச்சி மிக்க வரிகள் இடம்பெற்றிருக்கும்.

அதுபோலவே தான் நேசித்து, சுவாசித்த தலைவர் அண்ணா துயிலுறும், அணையாவிளக்கெரியும் நினைவிடத்தில் அண்ணாவிடம் இரவலாய்ப் பெற்ற இதயத்துடன் இறந்த பிறகும் போராடி இடம் பெற்று அமைதி கொண்ட போர்க்குணம் மிக்க, மானமுள்ள சுயமரியாதைக்காரர் தலைவர் கலைஞர் நினைவுநாளில் அமைதிப் பேரணிக்கு அழைக்கிறார் நமக்கு அண்ணாவாக, கலைஞராக காட்சி தரும், ஆட்சிதரும் மாட்சிமை மிகு திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள்.

“ மந்திரி நமது மாநகர்தன்னில் மாதம் மும்மாரி மழைப் பொழிகிறதா? “ என அந்தப்புரத்தில், அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து மக்கள் நலன் விசாரித்த அந்தக் கால அரசர்களைப் போலல்லாமல், தலைமைச் செயலகத்தில் இருந்து கூட தகவல் அறிய விரும்பாமல், தானே அடைமழையால், கடும் புயலால் சிக்குண்டு அவதியுறும் மக்களை சகதியிலும், சாக்கடை, சாலை, குடிசைப் பகுதியிலும் குனிந்து சென்று மக்கள் பணியாற்றும் மனிதநேயர், மாண்புமிகு முதலமைச்சர் சென்னைக்கு அழைக்கிறார் நம்மையெல்லாம்!

இது தலைவரின் ஆணையல்ல. அன்பான அழைப்பு!

அனைவரும் தவறாமல் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவுகளை சுமந்தபடி அமைதிப் பேரணியில் சங்கமிப்போம்!

ஓங்கட்டும் அணையாவிளக்கில் ஒளிரும் அற்புத விளக்காம் தலைவர் தலைவர் கலைஞர் அவர்களின் பெரும்புகழ்!



திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் அரண்வாயில் ஊராட்சியில் 16.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை திறப்பு விழா நடைபெற்றது. இதனை பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார் இதில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் மெல்கி ராஜாசிங், கூட்டுறவு பதிவாளர் சுகன்யா, விற்பனையாளர்கள் எம்ரோஸ், பிரதாப், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், என்.ஜனார்த்தனன், எம்.அப்புன்ராஜ், மோகன் தாஸ், ஏ.அபினேஷ், ஏ.பி.எஸ்.பாலஜி, சண்முகம், கே.முனுசாமி, தமிழரசன், பிரபு, சி.கங்காதரன், கே.சம்பத், உள்பட நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.